தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986 மே 14, புதன் கிழமை
சித்திரை 31, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்."

அவையின் தன்மை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர் சொற்களின் வகை அறியாதவரே, அவர் சொல்ல வல்லதும் இல்லை.

1. வினாக்கள் — விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பீடித் தொழிலாளர் கூலி.

739 — (*வினா எண் 7267) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களின் கூலியை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1000 ஜாடி பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 8.00 என்பதற்குப் பதில் ரூ. 9.50 என்றும், 1000 சாதா பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 7.80 என்பதற்குப் பதில் ரூ. 9.30 என்றும் குறைந்த அளவு ஊதிய வீதங்களை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் உள்ள பீடி கம்பெனிகளில் அவர்கள்

என்ன கூலி கொடுக்கிறார்கள் தொழிலாளிக்கு? நமது மாநிலத்திற்கும் அதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? குறிப்பாக கேரளாவிலிருந்து வருகின்ற மலபார் பீடி என்ற பீடி பெரிய பீடியாக இருப்பதால் இங்கேயுள்ள பீடிகளின் விற்பனை குறைவாக உள்ளது. ஆகவே, வெளி மாநிலப் பீடிகள் நம் மாநிலத்தில் தடை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்றைய மாநில பீடிகளைப் பற்றி நாம் எதுவும் சொல்வதற்கில்லை. இந்த மாநிலத்தைப் பொறுத்தும், இங்கே பீடி சுற்றுகின்ற தொழிலாளியைப் பொறுத்தும்தான் நாம் ஊதிய வீதங்களைப் பற்றியும், அதைச் சுற்றுபவர்களுக்கான கூலியைப் பற்றியும் நாம் நிர்ணயம் செய்கிறோம். இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் தயார் செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளும் வேறொரு மாநிலத்திற்குச் செல்லலாம், அதற்குத் தடை விதிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பீடிக்கம்பெனிகள் இருக்கின்றன? அதில் எத்தனை தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள்? குடி குடியைக் கெடுக்கும் என்று மது பாட்டில்களில் எழுதியிருக்கிறார்கள், சிகரெட்டிலும் கூட எழுதியிருக்கிறார்கள். அதைப் போல பீடிகளிலேயும், பீடி குடிப்பது உடம்புக்குக் கெடுதி என்று ஏதேனும் எழுதுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எழுதுவதற்கே பீடியில் இடம் இருக்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது. அப்படியே இருந்தாலும் எழுதியதையும் சேர்த்து எரித்துவிட்டுக் குடிப்பார்கள். அந்த எழுத்துக்கும் சேர்த்துதான் கேடு ஏற்படும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பீடித் தொழிலாளர்களின் மீது கொண்டிருக்கின்ற அக்கறையை நான் பாராட்டுகின்றேன். ஆனால் விவசாயக் கூலி, தொழிலாளிக்கு வேலையில்லாத நாட்களிலே ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுப்போம் என்று ஆளும் கட்சி தேர்தல் நேரத்திலே வாக்குறுதி தந்திருக்கிறது. அந்தத் தேர்தல் வாக்குறுதி, இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளாகியும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இதை அரசு நிறைவேற்றுமா? எப்பொழுது நிறைவேற்றும் என்பதை அமைச்சரின் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதோடு இந்த. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக துணைக் கேள்வியைக் கேட்க வேண்டும். இதற்கு அமைச்சர்களிடத்தில் பதில் இருந்தால் சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் கூலி பற்றிய கேள்வி இது. ஆகவே, இந்தக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கின்ற கேள்விக்கும் தொடர்பு இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் பீடிகளுக்கு எவ்வளவு கூலி என்று அரசு நிர்ணயித்திருந்தாலும் கூட, பல யிடங்களில் ஆயிரம் பீடிகளுக்குரிய புகையிலையைக் கொடுத்து விட்டு, பீடியின் விலைக் கிரயத்திற்கு கூலியைப் பிடித்து விடுகின்றனர். இப்படி அந்தக் கூலிக் கிரயத்தை அந்த முதலாளிகள் கழித்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் தொழிலாளர்களின் கோரிக்கையின்படி பீடி சுற்றுவதற்கு 12 ரூபாய் என்று கூலியை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 5—5—1984 முதல் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது:—1,000 ஜாடி பீடிகள் சுற்ற ரூ. 8.00 (அகவிலைப்படி உட்பட):—1,000 சாதா பீடிகள் சுற்ற (எந்த அளவாயினும்—முக்கூடல் வகை உட்பட) ரூ. 7.80 (அகவிலைப் படி உட்பட). இப்போது அண்மையிலே தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ், சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு ஊதிய வீதங்களை உயர்த்தி 1985-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன்படி 1,000 ஜாடி பீடிகள் சுற்ற ரூ. 9.50, 1,000 சாதா பீடிகள் சுற்ற ரூ. 9.30. இந்த ஊதிய வீதங்களையே மாநிலம் முழுவதற்கும் பொருந்தச் செய்ய இவற்றையே குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் குறைந்த அளவு ஊதிய வீதங்களாக அறிவிக்கை முறையில் நிர்ணயிக்க தொழிலாளர் துறை ஆணையர் பரிந்துரை செய்திருக்கிறார். அதை பரிசீலித்து விரைவிலேயே ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை மாநிலம் முழுவதும் மேற் கொள்ளப்பட வேண்டும் என்ற ஆணை விரைவிலேயே பிறப் பிக்கப்பட இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மலர்மன்னனுக்கு மட்டும் இந்த சபை அல்ல. 7, 8 உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் அமருங்கள். மரபைக் காப்பாற்றுங்கள். கொஞ்சம் அவை அடக்கத்தோடு இருங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள்.

740—(*வினா எண் 7881) திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) எங்கெங்கு எத்தனை நிறுவப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 11 புயல் எச்சரிக்கைக் கருவிகள் கீழ்க்கண்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளன :—

1. சீர்காழி.
2. தஞ்சாவூர்.
3. மயிலாடுதுறை.
4. நன்னிலம்.
5. நாகப்பட்டினம்.
6. திருத்துறைப்பூண்டி.
7. வேதாரணியம்.
8. பட்டுக்கோட்டை.
9. அதிராமபட்டினம்.
10. பொறையார்.
11. மல்லிப்பட்டினம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை போன்ற பல்வேறு இடங்களில் புயல் எச்சரிக்கைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார். ஆண்டுதோறும் வழக்கமாக தஞ்சையிலே புயல் அடிக்கின்ற நேரங்களில் ஒரத்தநாடு தாலுக்காவில் அதிகமாக சேதம் ஏற்படுகிறது. எனவே, மத்தியப் பகுதியான ஒரத்தநாட்டில் ஒரு புயல் எச்சரிக்கைக் கருவி அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.